சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP.No.399/2010

ம.சா.2

நாள். 25.08.2023.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கருப்புசாமி | மதம்: | --- |
| தகப்பனார் /கணவர் பெயர்: | --- | ஜாதி: | --- |
| கிராமம்: | --- | வேலை: | --- |
| வட்டம்: | --- | வயது: | --- |

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்னுவில் 3 ம் தரப்பினர் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரர் ஓட்டி சென்ற லாரியில் நான் கிளினராக சென்றேன். அப்போது சாலையில் இடது புறம் ஒரு லாரி பழுதாகி நின்று கொண்டிருந்தது. அப்போது இருட்டாக இருந்ததால் லாரி இருந்தது தெரியவில்லை. நின்ற லாரியின் சமிக்சை விளக்கு எரியவில்லை. நாங்கள் சென்ற லாரி நின்று கொண்டிருந்த லாரியின் பின்பக்கமாக மோதியது. நின்று கொண்டிருந்த லாரி ஓட்டுநரின் கவனகுறைவு தான் விபத்திற்கு காரணம்.

4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தின் போது நான் மனுதாரர் லாரியில் கிளினராக இருந்தற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. மனுதாரரும், ஓனர் பாலாஜியும் கேட்டு கொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். நான் வந்த லாரியில் முன் பக்கம் 8 முகப்பு விளக்குகள் இருந்தது என்றால் சரிதான். அந்த வெளிச்சத்தில் முன்னால் இருக்கும் லாரி தெரியும் என்றால் பனி மூட்டத்தால் தெரியவில்லை. விபத்து சம்பந்தமாக மோகன் மீது தான் குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கிளினராக செல்லவும் இல்லை, விபத்தை நேரில் பார்க்கவும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-கருப்புசாமி

Sd/- திரு. ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.